# நாமக்கல் மேற்கு மாவட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு!



கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தொகுதி மேற்பார்வையாளர்கள் கூட்டத்தில் அறிவித்ததன்படி வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல் முகாம் குறித்த பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளுக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| **அமைச்சர் மரு.மா.மதிவேந்தன்,** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | | **கே.இ.பிரகாஷ்,** மக்களவை உறுப்பினர் – ஈரோடு |
| 095-பரமத்திவேலூர் தொகுதி **திருமதி.உமாராணி** மாநில அயலக அணி துணைச் செயலாளர் | 096-திருச்செங்கோடு தொகுதி **அ.சீனிவாசன்** சேலம் கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் | 097-குமாரபாளையம் தொகுதி **வி.சி.சந்திரகுமார்** மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் |

| வ. எண் | தொகுதி | நாள் & நேரம் | | ஒன்றிய/நகர/பேரூர் | இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு | 05.11.2024 | 2.00 மதியம் | மல்லசமுத்திரம் பேரூர், மல்லசமுத்திரம் ஒன்றியம். | செங்குந்தர் திருமண மண்டபம், சந்தைப்பாவடி, மல்லசமுத்திரம். |
| 2 | | | 3.00 மதியம் | எலச்சிபாளையம் மேற்கு ஒன்றியம் | முத்து மஹால், பிரிவு ரோடு, குமரமங்கலம். |
| 3 | | | 4.00 மாலை | திருச்செங்கோடு ஒன்றியம் | மாவட்ட கழக அலுவலகம், திருச்செங்கோடு. |
| 4 | | | 5.00 மாலை | திருச்செங்கோடு நகரம் | மாவட்ட கழக அலுவலகம், திருச்செங்கோடு. |
| 5 | குமாரபாளையம் | 05.11.2024 5.00 மாலை | | பள்ளிபாளையம் நகரம் | நகர கழக அலுவலகம், பள்ளிபாளையம், ஆவாரங்காடு. |
| 6 | | 06.11.2024 | 9.00 காலை | பள்ளிபாளையம் வடக்கு ஒன்றியம், படைவீடு பேரூர் | ஒன்றிய கழக அலுவலகம், முனியப்பன் கோவில், பல்லக்காபாளையம். |
| 7 | | | 10.00 காலை | குமாரபாளையம் வடக்கு நகரம், குமாரபாளையம் தெற்கு நகரம் | நகர கழக அலுவலகம், குமாரபாளையம். |
| 8 | | | 11.00 காலை | பள்ளிபாளையம் மத்திய ஒன்றியம், திருச்செங்கோடு ஒன்றியம் | ஒன்றிய கழக அலுவலகம், ஈ.காட்டூர், வெப்படை. |
| 9 | | | 12.00 மதியம் | பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம், ஆலாம்பாளையம் பேரூர் | பெருமாள் கோவில் மண்டபம், அண்ணா நகர், காடச்சநல்லூர். |
| 10 | பரமத்திவேலூர் | 09.11.2024 | 9.00 காலை | பரமத்தி ஒன்றியம் | சமுதாயக்கூடம், நடந்தை. |
| 11 | | | 10.00 காலை | கபிலர்மலை ஒன்றியம் | சோழிய வேளாளர் திருமண மண்டபம், கபிலர்மலை. |
| 12 | | | 11.00 காலை | மோகனூர் மேற்கு ஒன்றியம் | புகழி மண்டபம், செங்கப்பள்ளி. |
| 13 | | | 12.00 மதியம் | எலச்சிபாளையம் கிழக்கு ஒன்றியம் | மாரியம்மன் திருமண மண்டபம், மேட்டுப்புதூர், மாணிக்கம்பாளையம். |

இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் பகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ்.எம்.மதுரா செந்தில்,**
**மாவட்ட கழக செயலாளர்.**

**நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க**

தருமபுரி மாவட்டமும் “எப்போதும் வென்றான்” என்ற பெயரை

# கழகத்தலைவரிடம் பெற களத்தில் கருத்தாய் உழைத்திட வேண்டும்!

## தேர்தல் பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் பேச்சு

தருமபுரி, நவ. 6 -

முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி,திமுக தலைமை கழகம் மூலம் தருமபுரி மேற்கு மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தேர்தல் பார்வையாளர்களின் அறிமுக கூட்டம் தர்மபுரி மேற்கு மாவட்ட திமுக சார்பில் காரிமங்கலம் திமுக கட்சி அலுவலகத்தில் அவைத்தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.மனோகரன் தலைமையில், தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன்,மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ. மணி முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தர்மபுரி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பாப்பி ரெட்டிப்பட்டி, அரூர், பாலக்கோடு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு தலைமை கழகத்தால் நியமனம் செய்யப்பட்ட தேர்தல் பார்வையாளர்கள் எம்.சுரேஷ்குமார், சி.செல்லத் துரை, சி.அரியப்பன் ஆகியோரை தர்மபுரி மேற்கு மாவட்ட செயலாளர்,முனைவர்.பி.பழனியப்பன் அறிமுகம் செய்து வைத்து வருகின்ற சட்டமன்ற தேர்தல் களத்தில் பாப்பிரெட்டிப்பட்டி, அரூர்,பாலக்கோடு ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து விளக்கிப் பேசினார்.

அவர் பேசியதாவது: தர்மபுரி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், பாலக்கோடு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் வருகின்ற 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர்,நகர செயலாளர்கள் ஒருங்கிணைந்து களப்பணி ஆற்றி மூன்று தொகுதிகளிலும் வெற்றி பெற்று அந்த வெற்றியினை தமிழ்நாடு முதலமைச்சர் உழைப்பின் சிகரம் நமது கழகத்தலைவர் பாதங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் வருகின்ற சட்ட மன்ற தேர்தலை மனதில் முன்னிறுத்தி வாக்குச்சாவடிகள் உள்ள பகுதிகள், வாக்குச்சாவடி முகவர்கள் நியமனம், வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் நியமனம், வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் உள்ளிட்ட பணிகளில் கவனம் செலுத்தி அந்தந்த பகுதிகளில் உள்ள கழக நிர்வாகிகள் தீவிர களப்பணி ஆற்ற வேண்டும்,தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளபடி இம்மாதம் 16 மற்றும் 17ஆம் தேதி மற்றும் 23, மற்றும் 24 ஆம் தேதி ஆகிய நாட்களில் வாக்காளர் சிறப்பு முகாம்களில் கழக நிர்வாகிகள் பங்கேற்று வாக்காள பொதுமக்களுக்கு உதவிட வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

கடந்த சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் கழகத்திற்கு தேர்தலில் சரிவர பணியாற்றாத நிர்வாகிகளை மாற்றும் பொறுப்பு தற்போது நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் பார்வையாளர்களிடம் உள்ளது ஆகவே ஒன்றிய பேரூர் கழக நகர செயலாளர் தங்கள் பகுதிகளில் கடந்த தேர்தலில் சரிவர பணி புரியாதவர்களை அடையாளம் கண்டு அவர்களை மாற்றுவதற்கு தேர்தல் பார்வையாளர்களுக்கு உதவிட வேண்டும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிகளிலும் கிராமங்கள் தோறும் பிஎல்சி எனப்படும் பூத் கமிட்டிகள் 100% அமைக்க வேண்டும்,

மேலும் கழகத்தின் இளைஞர் அணி செயலாளர் மற்றும் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி வருகின்ற சட்டமன்ற தேர்தலில் இளைஞர் அணியினர் சிறப்பான முறையில் பணியாற்றி வரலாற்று வெற்றி பெற உறுதுணையாய் செயல்பட வேண்டும்,புதிதாக நியமிக்கப்பட்ட சட்டமன்றத் தேர்தல் பார்வையாளர்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் வாக்காளர் பட்டியலை கையாள தெரிந்தவர்களாக,நல்ல பண்புள்ளவர்களாக, தைரியமானவர்களை தேர்ந்தெடுத்து வாக்குச்சாவடி முகவர்களாக நியமிக்க வேண்டும், இதற்கு தேர்தல் பார்வையாளர்களுக்கு ஒன்றிய, நகர பேரூர் கழக நிர்வாகிகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்,

முத்தமிழறிஞர் கலைஞர் தனக்கு பிடித்த ஊரின் பெயராக தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள “எப்போதும் வென்றான்” என்ற ஊரை குறிப்பிடுவார்.எப்போதும் வென்றானாக நாம் பெயர் பெற வேண்டும் என்றால் எப்போதும் உழைக்க வேண்டும்,எப்போதும் செயல்பட வேண்டும்,எப்போதும் பணியாற்றிக்கொண்டே இருக்க வேண்டும் என்று நமது கழகத் தலைவர் நமக்கு கூறியுள்ளார்.எனவே தர்மபுரி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பாப்பிரெட்டிப்பட்டி,அரூர்,பாலக்கோடு ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளையும் நாம் வென்று தருமபுரி மாவட்டமும் “எப்போதும் வென்றான்” என்ற பெயரை நமது கழகத்தலைவரிடம் பெற்றிட வேண்டும் என்பதையே நமது இலக்காக கொண்டு களத்தில் கருத்தாய் பணியாற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் கீரை.விஸ்வநாதன்,சத்தியமூர்த்தி, தலைமைச்செயற்குழு உறுப்பினர்கள் இரா.சித்தார்த்தன், சென்னகிருஷ்ணன்,பி.சி.ஆர்.மனோகரன்,மாவட்ட நிர்வாகிகள் முருகன், கிருஷ்ண குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் இல.கிருஷ்ணன், எம்வீடி.கோபால்,அடிலம்.அன்பழகன்,முனியப்பன்,பி.கே.அன்பழகன்,சந்திரமோகன்,செங்கண்ணன், மாது, வேடம்மாள்,ரத்தினவேல், பிரபுராஜசேகரன்,சரவணன், முத்துக்குமார், நகர செயலாளர்கள் வி.கே.ஸ்ரீனிவாசன், முல்லை ரவி,பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி, பேரூர் கழக செயலாளர் கு.கௌதமன், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மூத்த வழக்கறிஞர் சந்திரசேகர், இளைஞர் அணி அமைப்பாளர் சிவகுரு,துணை அமைப்பாளர்கள் மகேஷ்குமார், கோடீஸ்வரன்,ஐ.டி.விங் அமைப்பாளர் கு.தமிழழகன், சண்முகம், சம்பத்,மற்றும் மூத்த முன்னோடிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தேர்தல் பார்வையாளர்களின் அறிமுக கூட்டம் காரிமங்கலம் தி.மு.க. அலுவலகத்தில் அவைத்தலைவர்,கே.மனோகரன் தலைமையில், தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி முன்னிலையில் நடைபெற்றது. உடன் தேர்தல் பார்வையாளர்கள் எம்.சுரேஷ்குமார், சி.செல்லத்துரை, சி.அரியப்பன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் - ஒன்றிய - நகர பேரூர் பகுதிகளில்

# ஊராட்சி - வார்டு வாரியாக பி.எல்.ஏ. 2 சரிபார்த்து மாற்றியமைக்கும் பணி!

## மாவட்டச் செயலாளர் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!



நாமக்கல் கிழக்கு மாவட்டம் - தலைமைக் கழக அறிவிப்பின்படி ஒன்றியம், நகரம்/ பேரூர் பகுதிகளில் ஊராட்சி மற்றும் வார்டு வாரியாக பி.எல்.ஏ. 2 சரிபார்த்து மாற்றி அமைக்கும் பணி தலைமைக் கழகத் தேர்தல் தொகுதி பார்வையாளர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் என நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

**சட்டமன்றதொகுதி : நாமக்கல் சட்டமன்றதொகுதி**

**தொகுதிபார்வையாளர் :திரு. முனவர். ஜான்,**
மாநிலசிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவுதுணைச் செயலாளர்.

| வ. எண் | நாள் | ஒன்றியம்/ நகரம்/ பேரூர் |
|---|---|---|
| 1 | 06.11.2024 | நாமக்கல் தெற்குநகரம் |
| | | நாமக்கல் மேற்குநகரம் |
| 2 | 07.11.2024 | நாமக்கல் கிழக்குநகரம் |
| 3 | 09.11.2024 | புதுச்சத்திரம் வடக்குஒன்றியம் |
| 4 | 10.11.2024 | நாமக்கல் ஒன்றியம் |
| | 11.11.2024 | |
| 5 | 12.11.2024 | மோகனூர் பேரூர் |
| 6 | 12.11.2024 | மோகனூர் ஒன்றியம் |
| | 13.11.2024 | |
| 7 | 14.11.2024 | புதுச்சத்திரம் தெற்குஒன்றியம் |

**சட்டமன்றதொகுதி : சேந்தமங்கலம் சட்டமன்றதொகுதி**

**தொகுதிபார்வையாளர் :திருமதி. ஜே.ரேகாபிரியதர்ஷினி,**
மாநிலமகளிர் தொண்டர் அணிதுணைச் செயலாளர்.

| வ. எண் | நாள் | ஒன்றியம்/ நகரம்/ பேரூர் |
|---|---|---|
| 1 | 06.11.2024 | சீராப்பள்ளிபேரூர் |
| | | நாமகிரிப்பேட்டைபேரூர் |
| | | நாமகிரிப்பேட்டைஒன்றியம் (4 பஞ்சாயத்து) |
| 2 | 07.11.2024 | எருமப்பட்டிஒன்றியம் |
| 3 | 08.11.2024 | எருமப்பட்டிஒன்றியம் |
| | | எருமப்பட்டிபேரூர் |
| 4 | 09.11.2024 | சேந்தமங்கலம் ஒன்றியம் |
| | | காளப்பநாயக்கன்பட்டிபேரூர் |
| | | சேந்தமங்கலம் பேரூர் |
| 5 | 10.11.2024 | சேந்தமங்கலம் ஒன்றியம் |
| 6 | 11.11.2024 | கொல்லிமலைஒன்றியம் |
| 7 | 12.11.2024 | கொல்லிமலைஒன்றியம் |
| 8 | 13.11.2024 | மோகனூர் ஒன்றியம் ( 2 பஞ்சாயத்து) |
| | | நாமக்கல் ஒன்றியம் (1 பஞ்சாயத்து) |

**சட்டமன்றதொகுதி : இராசிபுரம் சட்டமன்றதொகுதி**

**தொகுதிபார்வையாளர் :திரு.நன்னியூர் ராஜேந்திரன்,**
மாநிலநெசவாளர் அணிதலைவர்.

| வ. எண் | நாள் | ஒன்றியம்/ நகரம்/ பேரூர் |
|---|---|---|
| 1 | 09.11.2024 | நாமகிரிப்பேட்டைஒன்றியம் |
| 2 | 10.11.2024 | வெண்ணந்தூர் ஒன்றியம் |
| 3 | 11.11.2024 | இராசிபுரம் ஒன்றியம் |
| | | பட்டணம் பேரூர் |
| 4 | 12.11.2024 | இராசிபுரம் ஒன்றியம் |
| | | பிள்ளாநல்லூர் பேரூர் |
| 5 | 13.11.2024 | இராசிபுரம் நகரம் |
| 6 | 14.11.2024 | வெண்ணந்தூர் ஒன்றியம் |
| | | வெண்ணந்தூர்பேரூர் |
| | | அத்தனூர் பேரூர் |
| | | இரா.புதுப்பட்டிபேரூர் |

**கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி.**
செயலாளர்
நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க.